[25th March 1960

House-sites for Harijans

* 165 *Q.*—Sri M. ETHIRAJALU : Will the Hon. the Minister for Works be pleased to state taluk-wise the number of applications received from Harijans of South Arcot District for the grant of house-sites during the years 1957–58 and 1958–59 and the number disposed of?

The Hon. Sri P. KAKKAN : A statement[a] is placed on the table of the House.

Sri M. ETHIRAJALU: அமைச்சர் அவர்கள் கொடுத்த பதிலிலிருந்து 544 மனுக்கள் இரண்டு வருஷத்திலே வாங்கப் பட்டிருக்கின்றன என்று தெரிகிறது. அதிலே 40 பேருக்குத் தான் நிலங்கள் ஆர்ஜிதம் செய்து கொடுக்கப்பட்டிருக்கிற தென்று தெரிகிறது. ஏன் இவ்வளவு குறைவான பேருக்குத்தான் மனைக்கட்டுகள் வழங்கப்பட்டிருக்கின்றன? காலதாமதத் திற்குக் காரணம் என்ன?

The Hon. Sri P. KAKKAN: நிலச் சொந்தக்காரர்களோடு தாவா ஒரு பக்கம் இருக்கிறது. 1959-ம் வருஷம் வரை போது மான "ஸ்டாப்" அங்கு இல்லை. பிற்பாடுதான் போதுமான அளவுக்கு "ஸ்டாப்" சாங்ஷன் செய்யப்பட்டிருக்கிறது.

Sri M. ETHIRAJALU: வருஷந்தோறும் அமைச்சர் களிடத்திலும், சட்டசபை மெம்பர்களிடத்திலும் வீடு கட்ட மனைக்கட்டு வேண்டுமென்று மனுக்களை ஹரிஜனங்கள் கொடுத் துக்கொண்டேயிருக்கிறார்கள். அதற்கு ஒரு அளவில்லை. இருப்பினும், இவ்வளவு மெதுவாக அவர்களுக்கு மனைக்கட்டு வழங்கிக்கொண்டிருந்தால், அவர்களுடைய குறை எப்போது தீர்க்கப்படும்? அதற்காக ஒரு தீவிரமான ஏற்பாடு செய்து உடனடியாக அவர்களுக்கு மனைக்கட்டு வழங்க சர்க்கார் ஏற்பாடு செய்யுமா ?

The Hon. Sri P. KAKKAN: மனைக்கட்டுகள் வாங்கிக் கொடுப்பதில் அரசாங்கம் அதிக அக்கறை எடுத்துக்கொண்டிருக் கிறது. சில இடங்களில் "எமர்ஜன்ஸி பவரின்" கீழ் கூட நிலங்கள் வழங்க ஏற்பாடு செய்திருக்கிறோம். தவிர, இந்த இராச்சியத்திலேயே, தென்னாற்காடு ஜில்லாவில்தான் அதிகப் படியான அளவுக்கு நிலங்கள் ஆர்ஜிதம் செய்யப்பட்டு ஹரிஜனங் களுக்கு வழங்கப்பட்டிருக்கின்றன. நான்கு தாசில்தார், ஒன்பது இன்ஸ்பெக்டர்கள் நியமிக்கப்பட்டு நல்ல முறையில் நடந்து வருகிறது.

Dr. A. SREENIVASAN: ஹரிஜன் என்ற ஜாதி மக்களை விட ஏழை ஜனங்கள் இந்து வகுப்பில் இருக்கிறார்களே, அவர்களுக்கு இந்தமாதிரிச் சலுகைகள் கொடுக்கப்படுமா?

The Hon. Sri P. KAKKAN: பின்தங்கிய மக்களுக்கும் இடம் வாங்கிக்கொடுப்பதில் ஓரளவு சலுகை கொடுக்கப்படுகிறது. பாதிப் பணம் அரசாங்கம் கொடுக்கிறது. பாதிப் பணம் அவர்கள் போட்டுக்கொள்ளவேண்டும்.

---

[a] Printed as Appendix IV on page 572 infra.